**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**நாள். 31.07.2025.**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 274/2015**

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | செல்லப்பெருமாள் | வயது | : | 50 |
| ஊர் | : | வடபூண்டிப்பட்டு | தொழில் | : | விவசாயம் |

**பி.வா.சா.1 (சேகர்) பிரதிவாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

நான் வழக்கில் 2-ஆம் பிரதிவாதியாவேன். நானும் 1ம் பிரதிவாதி கணபதியும் சேர்ந்து வாதி மற்றும் வாதியின் மனைவி பெயரில் அசல் வழக்கு எண் 47/2016 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சர்வே எண் 134/2A4-ல் உள்ள கிணற்றிலிருந்து வாதியும் அவரது மனைவியும் கிரையம் பெற்ற நிலத்திற்கு நீர் பாய்ச்சக்கூடாது என்று நிரந்தர தடையுத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எனக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் பொதுவானது என தீர்ப்பு அளித்து, வாதியும், அவரது மனைவியும் கிரையம் பெற்ற தனிநிலங்களுக்கு நீர்பாய்ச்சக்கூடாது என்றும் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். வாதி என் மீதும் 1-ம் பிரதிவாதி மற்றும் சிலர் மீதும் அசல் வழக்கு எண். 107/2016 என்ற வழக்கில் 3 கிணறு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் சர்வே எண் 134/2A4-ல் வாதிக்கு 1/3 பங்கு அளித்து தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் நாங்கள் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதின் பேரில் மேற்படி சர்வே எண் 134/2A4 ஆனது இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் என் தாயார் எனக்கும், 1-ம் பிரதிவாதியான கணபதிக்கும் எழுதிகொடுத்த தானசெண்டில்மெண்ட் பத்திரம் மற்றும் என் தாயார்

எனக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனம் மற்றும் வாதி 1-ம் பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை கூர்சீட்டு மற்றும் பதிவு படாத கிரைய ஒப்பந்தத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். எனக்கு என் தாயார் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட், உயில் சாசனத்தின் படியான சொத்துக்கள் என்னுடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் என் அம்மா அனுபவித்த சொத்தை எனக்கு எழுதி வைத்தார். அவர் எழுதி வைத்ததின் பேரில் அச்சொத்துக்கள் என் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் என் தாயார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆனது அவர்களுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் 134/2A2 ஆனது மட்டும் தனிப்பட்ட சொத்து ஆகும். ஏனைய சொத்துக்கள் எனது தகப்பனார் சொத்தாகும். 1993-ல் ஏற்பட்ட கூர்சீட்டின் படி வாதி, நானும், 1-ம் பிரதிவாதியும் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சர்வே எண்134/2A2 பொருத்த மட்டில் நானும், வாதியும், 1ம் பிரதிவாதியும் சமமாக அனுபவித்து வருகிறோம். இதர சொத்துக்கள் அனைத்தும் மணிவண்ணன் தவிர்த்து நாங்கள் அனைவரும் அனுபவிக்கிறோம். நான் கூறுவது பொய் என்றாலும் பாகப்பிரிவினை கூர்சீட்டுபடி வாதியும், நானும், 1-ம் பிரதிவாதியும் தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியில்லை. சர்வே எண். 134/2A வாதிக்கு 72 1/2, எனக்கு 71 1/2 , 1-ம் பிரதிவாதிக்கு 38 1/2 செண்ட்டிலும் கூர்சீட்டின் படி பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது தவறாக பாகம் பிரிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 134/2A2-ல் 1.18 ஏக்கர் ஆனது என் அம்மாவுக்கு பாத்தியப்பட்டது. அதை தான் அவர்கள் சமமாக தான செட்டில்மெண்ட்டில் எழுதியுள்ளார். தான செட்டில்மெண்ட்படி சர்வே எண் 134/2A-ல் எனக்கு 71 1/2 செண்ட் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறானது அது உட்பிரிவு செய்ததை எடுத்துக்கொள்ளமால் எழுதப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி கணபதி பெயரில் சர்வே எண் 134/2A-ல் 38 1/2 செண்ட் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் பெயரில் சர்வே எண் 134/2A-ல் 72 1/2 செண்ட் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கூர்சீட்டின் படி 38 செண்ட் மட்டும் தான் என் அம்மாவுக்கு பாத்தியப்பட்டது. தவறாக என் அப்பாவின் சொத்துக்களையும் சேர்த்து 3 தான செட்டில்மெண்டிலும் எழுதிவைத்துள்ளார். 3 தான செட்டில்மெண்ட் சொத்துக்களும் செல்லாது என என் உடன் பிறந்த சகோதரிகள் தனியாக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் தரப்பினர்களாக

சேர்க்கப்பட்டுள்ளார்கள். என் தாயார் எங்களுக்கு எழுதிவைத்தது போல அவரின் மூன்று மகள்களுக்கும் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளாரா என்றால் 1 தான செட்டில்மெண்ட்டும் 1 உயிலும் எழுதிவைத்துள்ளார். அவர்களுக்கு எழுதப்பட்ட தான செட்டில்மெண்ட் செல்லாது என்று வழக்கு ஏதும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அச்சொத்துக்கள் என் அம்மாவின் பூர்வீகச்சொத்துக்கள் என்பதால் என் சகோதரிகளுக்கு அதில் உரிமையுள்ளது என்பதால் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது என் தாயார் எங்கள் மூவருக்கும் எழுதிவைத்த உயில்சாசன சொத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் சரிதான். 2 முதல் 20 அயிட்ட சொத்துக்களை சேர்க்க கோரி எங்களால் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுபதிக்கப்பட்டதின் பேரில் தான் மேற்படி சொத்துக்கள் சேர்க்கப்பட்டன என்றால் சரிதான். சர்வே எண் 134/2A2 8-வது அயிட்ட சொத்தானது தான செட்டில்மெண்ட் செய்யப்பட்ட சொத்து என்றால் சரிதான். சர்வே எண் 134/2A4 9-வது அயிட்ட சொத்தானது கிணறு என்றும் அது அசல் வழக்கு எண் 107/2016 மற்றும் 47/2016-ல் மூன்று பேருக்கும் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். 11 வது அயிட்ட சொத்தான பழைய சர்வே எண் 119/1 புதிய சர்வே எண் 119/4 வாதி சம்மந்தன் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் அது மோசடியான பட்டா. 1949-ல் என் பாட்டனார் ஆறுமுகமுதலியார் அவர்கள் அப்பாதுரை மற்றும் முத்தம்மாள் என்பவரிடம் கிரையம் வாங்கினார். 1982-ல் என் அப்பாவுக்கும், என் பெரியப்பாவுக்கும் இடையே ஏற்பட்ட பஞ்சாயத்தார் முன்னிலையில் ஏற்பட்ட கூர்சீட்டின் படி என் அப்பா செல்லப்பெருமாளுக்கு பாத்தியமாகும். அதில் வாதி கையொப்பம் இட்டிருந்தார். அதில் அவருக்கு எவ்வித பாகமும் வேண்டாம் என்று பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் மூலம் எழுதிக்கொடுத்தார். மேற்படி சொத்தானது வாதிக்குரிய சொத்து என்பதால் தான் நாங்கள் கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கினோம் என்றால் அவருக்கு அதில் பாகம் இருந்தது அதனால் அவருடைய பாகத்தை கிரையம் ஒப்பந்தம் மூலம் எழுதி வாங்கினோம். 12 -வது அயிட்ட சொத்தானது சர்வே எண் 119/25 வாதி தான் சுயமாக சம்பாதித்து வாங்கின சொத்து என்றால் இல்லை. அவர் மூத்தவர் என்பதாலும் நாங்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்ததாலும் அவரின் பெயரில் கிரையம் பெற்றார். 17-வது அயிட்ட சொத்து சர்வே எண் 284/4சி வாதி கிரையம் பெற்ற சொத்து என்றால் அது அப்பாவின் சொத்தாகும். மீதி சொத்துக்கள் அனைத்தும் பாகபிரிவினை கூர்சீட்டின் படி பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 2 முதல் 7 அயிட்ட

சொத்துக்கள், 9,12 முதல் 18 மற்றும் 20,21,23 ஆகிய சொத்துக்களில் வாதிக்கு 1/6 பாகம் உள்ளது என்று நான் கூறியுள்ளேன் என்றும் அதன்படி பாகப்பிரிவினை வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1 முதல் 10 பிரதிவாதிகள் அதை கூட்டாக அனுபவித்து வருகிறோம். 1-வது அயிட்ட சொத்தானது பாகப்பிரிவினை செய்யப்படாததால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மற்ற சொத்துக்கள் அனைத்தும் தான செட்டில்மெண்ட் படியும் உயில்சாசனம் படியும் தனிதனியாக அனுபவித்து வருவதினால் மற்ற சொத்துக்கள் மீது பாகம் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறார் என்றால் சரியல்ல.

**(பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாா்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தாா்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.08.31 11:32:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு